**மொறட்டுவ மாநகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மொறட்டுவ மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மொறட்டுவ மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 24 ஆந் திகதிய 6/2155 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் விதிக்கப்பட்ட மாநகர சபைகள் நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான விதி இலக்கம் 84 மற்றும் மாநகர சபையினால் உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உள்ளூராட்சி நிறுவனங்களுக் கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 2017 மற்றும் 2019 திசெம்பர் 24 ஆந் திகதிய 6/2155 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 2017 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படாதிருந்ததுடன் அறிமுகப்படுத்தப்பட்ட மாதிரிகள் மற்றும் குறியீட்டு இலக்கங்களும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் நிதிக் காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல பெறுமதிகளுக்காகவும் முன்னைய ஆண்டிற்கு சமமாக இருக்க கூடிய ஒப்பீட்டுத் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | ஒப்பீட்டுத் தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2020 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு ஆரம்ப சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக நாட்டில் காணப்பட்ட நிலைமையினால் பதவியணியினர்கள் சாதாரணமான பிரகாரம் வேலைக்கு சமூகமளித்தலின் இடையூறின் காரணமாக 2020 ஆம் ஆண்டின் போது இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களில் 100 சதவீதம் இணங்க முடியாதிருந்தமையினால் 2020 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு ஆரம்ப சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றொன்று சபைக்கு சமர்ப்பிக்க முடியாதிருந்ததை அறியத் தருகின்றோம். | நியமம் மற்றும் வர்த்தமானியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 6.15 ஆம் பந்தியின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய பெறுமானத்தேய்வு முறைமையொன்று சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் நிலையான சொத்துக்கள் | 2020 இன் பாதீடு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்படாதிருந்த மையால் அதில் பெறுமானத்தேய்விற்கான ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மேலும் சொத்துக்கள் மீள்மதிப்பீடு | கணக்கீட்டுக் கொள்கை மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்கீடு செய்யும் போது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு புறம்பாக நடவடிக்கை எடுத்தமை மற்றும் சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக 2020 ஆம் ஆண்டில் பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | செய்யப்படாமை மற்றும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்குகளை தயாரிப்பதற்காக 100 சதவீதம் இணங்காமையின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டில் பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. 2021 இன் கணக்குகள் தயாரிக்கும் போது சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்படும் எனவும் அறியத்தருகின்றோம். | |

### 1.6.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்கீட்டு கொள்கையின் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட அடிப்படை மற்றும் பயன்படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு முறைமைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வெளிப்படுத்துதல் வேண்டும். |

### 1.6.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) விரிவான வருமானக் கூற்றின் பிரகாரம் மிகை ரூபா 24,003,920 ஆக இருந்த போதும் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது மிகையாக கொண்டுவரப்பட்ட பெறுமதி ரூபா 92,471,139 ஆனமையால் ஆண்டில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் தேறிய அதிகரிப்பு ரூபா 68,467,219 | விரிவான வருமானக் கூற்றின் பிரகாரம் மிகை ரூபா 24,003,920 ஆக இருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்று பழைய கணக்கீட்டு முறைமையை பின்பற்றி தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மிகையாக மீண்டெழும் செலவினம் மற்றும் | சுரியான கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருமானத்திற்கு இடையிலான வேறுபாடு ரூபா 92,471,139 மாத்திரமே கொண்டு வரப்பட்டிருந்தது. இது புதிய மாதிரி தரவுகளை உள்ளடக்கும் போது ஏற்பட்ட வழுக்களாக இருந்ததுடன் அது 2021 இன் கணக்குகள் தயாரிக்கும் போது சரியான முறையில் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். | |
| (ஆ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலஙகை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது வுருடாந்த பெறுமானத் தேய்வு, நிலையான வைப்பு வட்டி, கடன் வட்டி, ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல், ஆதனங்கள், பொறிகள், உபகரணங்களை விற்பனை செய்ததால் கிடைத்த பணம் மற்றும் இலாப நட்டங்கள் போன்றவை சீராக்கப்படாமையால் ஆண்டின் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு / குறைவு சரியாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | புதிய மாதிரி படிவத்தில் தகவல்களை உள்ளடக்கும் போது ஏற்பட்ட வழுக்களாக இருந்ததுடன், அதன் மூலம் காசு மற்றும் காசுக்குச் சமமாவைகளின் தேறிய அதிகரிப்பு அல்லது குறைவு தொடர்பில் தாக்கம் ஏற்படாதிருந்த நிலைமையாகும். இது இந்த வருடத்திற்கான மிகையில் இதன் சகல சீராக்கங்களும் ஏற்பட்டிருந்தமையால் காசு மற்றும் காசுக்குச் சமமாவைகளில் சரியான பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் 2020 ஆம் ஆண்டில் பெறுமானத் தேய்வுகளுக்குரிய ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படா மையினால் பெறுமானத்தேய்வு மாத்திரம் சீராக்கப்படாதிருந்ததை அறியத்தருகின்றோம். மேலும் 2021 இன் கணக்குகள் தயாரிக்கும் போது சரியான படிவத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி மேலதிகப் பற்று மீதி ரூபா 28,158,873 | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் வழங்கப்பட்டுள்ள | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | |
|---|---|
| ஆக இருந்த போதிலும் அது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறுங்கால செலுத்த வேண்டியவைகளின் கீழ் காண்பிக்கப்பட்ட போதிலும் தனியாக மேலதிகப்பற்றாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | மாதிரியின் பிரகாரம் வங்கி மேலதிகப்பற்று மீதி குறுங்கால செலுத்த வேண்டியவைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. 2021 இன் கணக்குகள் தயாரிக்கும் போது வங்கி மேலதிகப்பற்றை தனியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். |

**1.6.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பெறுமதி | வேறுபாடு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| ஊழியர் கடன் | 49,432,162 | 46,155,089 | 3,277,073 | ஊழியர் கடன் கணக்குகளின் மீதிக்கும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையில் காணப்படுகின்ற வேறுபாடுகளை இனங்கண்டு எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | வேறுபாடுகளை இனங்கண்டு கணக்கு மீதிகளை சரிசெய்தல் வேண்டும். |

**1.6.5 அதிகாரபலமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்**

| அதிகாரபலமின்றிய கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் 252 அத்தியாயத்தின் 188(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபை நிதியத்தை பயன்படுத்துவதற்கு முடியாத வகையிலான கொடுக்கல் வாங்கலகளான சபையின் 27 உறுப்பினர்களுக்காக திடீர் விபத்துக்கள் மற்றும் சுகாதார காப்புறுதிகளுக்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் (252 அத்தியாயம்) 188(1) உப பிரிவிற்கு முரணாக நடவடிக்கை எடுத்தமையால் ஏற்பட்ட நட்டம் அறவிடப்படல் வேண்டும். |

சபை நிதியத்திலிருந்து முறையே ரூபா 953,715 மற்றும் ரூபா 1,086,807 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 2,040,522 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 1,703,022 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 156 | 2003 முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான அறிக்கை மற்றும் பங்களிப்பு பணம் அனுப்புதலின் தாமதத்தின் அடிப்படையில் ரூபா 1,549,200 மிகைக் கட்டணம் செலுத்தும் பொறுப்பொன்று சபைக்கு எழுந்திருந்ததுடன் 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தில் சபையினால் செலுத்தப்பட்ட ரூபா 1,088,565 மற்றும் மிகுதி தொகை என்பவற்றை உரிய பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | நிதிப்பிரமாணம் 156 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 24,003,920 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 36,007,882 ஆகும்.

## 2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதன வரி மீதி ரூபா 210,216,132 ஆக இருந்ததுடன் அதில் ஆதனவரி பெறுமதி ரூபா 50,000 ஐ விஞ்சிய 372 ஆதனவரி அலகுகளில் இருந்து அறவிட வேண்டிய பெறுமதி ரூபா 85,434,110 ஆகும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252(1)(ஆ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலகு கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக சபை அதிகாரப் பிரதேசத்தில் 722 நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 38,305,771 நிலுவை மீதி (வரியின்றி) மீளாய்வாண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த மீதியில் 2012 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய அறவிட வேண்டிய ரூபா 25,663,826 தொகை உள்ளடங்கியிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பெறவேண்டிய வருமானங்களை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பாணந்துறை பிரதேச சபையின் கழிவுப் பொருட்கள் கறதியான கழிவுப் பொருள் தளத்தில் அகற்றுவதற்காக 2013 முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரியதாக அந்த சபையிலிருந்து கிடைக்க வேண்டிய (வரியுடன்) ரூபா 1,297,188 தொகையை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பெறவேண்டிய பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இரண்டு உறுப்பினர்களிடமிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை எரிபொருள் மீதி ரூபா 133,100 இனை | ரூபா 75,000 தொகையான மீதி முன்னாள் நகர உறுப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு இருந்ததுடன் கோவை சட்ட பிரிவிற்கு அனுப்பப்பட்டு அவர் | பெறவேண்டிய வருமானங்களை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அறவிடுவதற்கு தவறியிருந்தது. | வெளிநாடு சென்றிருந்தமையினால் அவருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவருக்குரிய ஆதனங்கள் அவரின் பெயரில் இல்லாதிருந்தமை காண்பிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருந்தது. அதன் பின்னர் அவர் வெளிநாடு சென்றதை உறுதிப்படுத்துவதற்காக குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனினும் இதுவரை அதற்காக பதில் கிடைத்திருக்கவில்லை. மிகுதிப் பணம் அறவிடப்படுகின்றது. | |

## 2.3 மிகைக் கட்டணம்

-----------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டில் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணத்துக்காக 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 760,173 தொகை அறவிடுவதற்கு காணப்பட்டதுடன் அந்தப் பணம் 2020 திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நகர உறுப்பினருக்கு முத்திரை படி செலுத்தியதன் காரணமாக ஏற்பட்டிருந்த மிகைக் கட்டணத்திற்கான பணத்தை அறவிடுவதற்காக மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. பிரதான உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிக்காக பதிற் கடமை சம்பளம் செலுத்துதல் தொடர்பான தகவல்கள் எங்களிடம் காணப்படாதிருந்தமையால் உரிய தகவல்களை கண்டறிந்ததன் பின்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புவாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்தினனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனவரி பிரிவில் கணனி சேவைக்கு நியமிக்கப்பட்டுள்ள ஊழியர் பொது இரகசிய குறியீடு (Common Pass word) பயன்படுத்தி 2018 ஆம் ஆண்டில் 10 சந்தர்ப்பங்களின் போது ரூபா 105,893 பெறுமதியான சிட்டைகளை இரத்துச் செய்து ஆதனவரி மோசடியொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தார். பதவிநிலை உத்தியோகத்தருக்கு சொந்தமாக காணப்பட வேண்டிய இரகசிய உள் நுழைவு குறியீடும் (Secret Pass word) மோசடியாக பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | மோசடிகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்பெக்டர் வண்டிக்கு 1999 ஆகஸ்ட் 10 ஆந் திகதி இடம்பெற்ற விபத்து தொடர்பான பாதிப்பிற்கு உட்பட்டவருக்கு ரூபா 3,001,717 தொகை செலுத்துதல் குற்றம் இழைத்தவரான சபையின் சாரதிக்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அந்தத் தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் சாரதியிடமிருந்து ரூபா 112,205 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் 2019 மார்ச் முதல் அறவீடுகள் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபைக்கு அறவிட | வாகன விபத்திற்காக நீதிமன்ற நடவடிக்கைகளின் பின்னர் செலுத்தப்பட்ட இழப்பீட்டுப் பணம் சபை அங்கீகாரத்தின் பிரகாரம் இந்த சாரதியின் தவணை பணமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மீண்டும் அந்த தவணைப் பணத்தை நீக்கி சலுகை வழங்குமாறு தாபன குழுவின் மூலம் மாநகர சபைக்கு பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்தி அதன் பிரகாரம் கீழே | ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்டு நட்டத்தை அறவிடுதல் வேண்டும். |

| | |
|---|---|
| வேண்டிய ரூபா 2,889,512 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்படுகின்ற பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்தன. மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 302 மற்றும் 310 ஆம் பிரிவுகள் தொடர்பில் கவனம் செலுத்தி சாரதி தொடர்பில் மனிதாபிமான அடிப்படையில் தேவையான நியாயத்தை வழங்குவது தொடர்பில் சபை கவனம் செலுத்தியமையால் அவருக்கான ஒழுக்காற்று நடவடிக்கைகள் தேவையில்லாதிருந்ததாக பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| த சொய்ஸா விளையாட்டரங்கில் ‘‘மொறட்டுவ விளையாட்டு கழகம்’’ என்ற பெயரில் இரண்டு மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் கட்டிடம் சபையின் அனுமதியின்றி மூன்றாவது தரப்பினரான சமூக அமைப்பிற்கும் (Club House), உடற்பயிற்சி நிறுவனத்திற்கும் ‘‘மொறட்டுவ விளையாட்டு கழகம்’’ இனால் உப வாடகைக்கு வழங்கி மாதமொன்றுக்கு முறையே ரூபா 25,000 மற்றும் ரூபா 30,000 ஆக மாதாந்தம் கூட்டுமொத்தமாக ரூபா 55,000 வீதம் உழைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, கிரிக்கெட் போட்டிகள் நடாத்தப்படுகின்ற தினங்களில் மொறட்டுவ விளையாட்டு கழகத்தினால் கணிசமான தொகையொன்று உழைக்கப்பட்டிருந்ததுடன் சபையினால் உழைக்கப்பட வேண்டியிருந்த வருமானம் அவ்வாறு வெளித்தரப்பினரால் உழைக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | த சொய்ஸா விளையாட்டரங்கு மொறட்டுவ மாநகர சபைக்கு சொந்தமான சட்டரீதியான ஆவணமொன்றமாக இருந்தமையினால் தற்போது அந்த நிலத்தில் பேணிச் செல்லப்படுகின்ற மொறட்டுவ விளையாட்டு கழகத்திற்கு சொந்தமான சகல பொருட்களையும் அகற்றி கட்டிடத்தின் உரித்தை இந்த சபைக்கு கையளிக்குமாறு அந்த விளையாட்டு கழகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்டிருந்த கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையினால் இது தொடர்பான நடவடிக்கைகள் இதுவரையிலும் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. நிலைமை சரியானதன் பின்னர் அவர்கள் இந்த நிலத்திலிருந்து விலகிச் செல்லாமல் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்திருந்தனர். | அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |